කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective
Established 1984

# 20ஆவது திருத்தச் சட்டமூலம் பற்றிய கூற்று

## பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு
## 2020 ஐப்பசி 08

சமூக நீதி மற்றும் மனித உரிமைகளுக்கான ஆதரிப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் அமைப்பான பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் நடப்பு நிலைமை நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்புமீது தோற்றுவிக்கின்ற தாக்கம் சம்பந்தமாகத் தனது தீவிரமான கவனத்தைச் செலுத்துகின்றது. 20ஆவது திருத்தத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஊடக சுதந்திரம், தகவலறிவதற்கான உரிமை, தத்துவங்களைப் பிரித்தொதுக்குதல் (வலு வேறாக்கம்), சுயாதீனமான ஆணைக்குழுக்கள் எதிர்கொள்கின்ற சிக்கலான நிலைமை, பொறுப்புக்கூறல், ஊழல் மற்றும் அடிப்படை உரிமைகள்மீது விதித்துள்ள மட்டுப்பாடுகள் சம்பந்தமான ஏற்பாடுகள் என்பன எமது கவலைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

**சுதந்திர ஊடகமும் தகவலறிவதற்கான உரிமையும்**
முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது திருத்தம் ஏதேனும் தேர்தல் அல்லது மக்கள் கருத்துக் கணிப்பினை நடாத்துதலுடன் தொடர்புடையதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு சில வழிகாட்டுநெறிகளுக்கு அமைவாக மேற்படி ஊடக நிறுவனங்கள் செயலாற்ற வேண்டுமென அனைத்து ஊடக நிறுவனங்கள் மீதும் விதியொன்றினை அறிமுகஞ் செய்கின்றது. (20ஆவது திருத்தத்தின் 20(3)). சர்வசன வாக்குரிமையை அமுலாக்குவதற்கான தீர்வுக்கட்டமான காலகட்டமொன்றில் வெகுசன ஊடகங்கள் மீதான அரச கட்டுப்பாடு மற்றும் தகவல்களை அணுகுதல் பற்றிய பாதகவிளைவுகள் பற்றிய யாதேனுமோர் குறிப்பால் உணர்த்துதல் எமது மனக்கவலைக்கு ஏதுவாக அமைகின்றது.
20ஆவது திருத்தத்தின் 6ஆவது பிரிவினால் தகவலறிவதற்கான உரிமை பற்றிய பொறியமைப்பினைப் புறந்தள்ளுதல் மூலமாக மேற்படி பொறியமைப்பு ஆபத்திற்கு இலக்காக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவிற்குச் செய்யப்படுகின்ற நியமனங்கள் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைக்கிணங்க மேற்கொள்ளப்படல் வேண்டுமெனத் தகவலறிதல் சட்டம் விதித்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தில் அரசியலமைப்புப் பேரவையை மீள்நிறுவுகின்ற பாராளுமன்றப் பேரவைக்கு இந்நியமனங்களை மேற்கொள்வதற்கான தத்துவங்கள் வழங்கப்படவில்லை. நவீன ஜனநாயக சமூகங்களில் அடிப்படை உரிமைகளில் ஒன்றாவும் மிகவும் முக்கியமானதுமான அம்சமாக அமைகின்ற தகவல்களை அணுகுதல் பாதுகாக்கப்படல் வேண்டும். இப்பொறியமைப்பு விதிக்கப்பட்ட பின்னர் அது பரவலாகப் பாவனைக்கு எடுக்கப்பட்டதோடு அதற்கிணங்கத் தகவல்களை அணுகுதல் மற்றும் பெற்றுக்கொள்வதற்கான இயலுமைமீது விதிக்கப்படக்கூடிய மட்டுப்பாடுகள் பிற்போக்கானவையாக அமைவதோடு கண்டிக்கப்படவும் வேண்டியவையாகும்.

**தத்துவங்களை பிரித்தொதுக்குதல் (வலுவேறாக்கம்)**
வலுவேறாக்கம் ஜனநாயக ஆட்சியின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். அதன்மூலமாக அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் சுயாதீனமாக செயலாற்றுவதற்கான வாய்ப்பு இயலுமை உருவாக்கப்படுகின்றது. அதேவேளையில் அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவுமீதும் உச்ச அதிகாரம் குவிதலைத் தடுக்கும்பொருட்டு தடைகளும் கட்டுப்பாடுகளும் அடங்கிய முறைமையொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

Telephone: +94-11-2690192, 5632045, 5635900, 5635800, 2690201, Fax: +94-11-2690192, 2690201, Email: wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476

முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக இப்பெறுமானங்கள் மங்கலாக்கப்பட்டு ஜனாதிபதியின் நிறைவேற்றுப் பதவிக்கும் ஜனாதிபதியின் ஆட்சியின் கீழுள்ள ஏனைய பிரிவுகளுக்கும் வரையறையற்ற தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பாராளுமன்றம் கலைக்கப்படுதல் - 20ஆவது பிரிவின் 14ஆவது பிரிவு**

முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தின் கீழ், ஒருசில மட்டுப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் தவிர்ந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான தத்துவம் ஜனாதிபதிக்கு உரித்தாவதோடு ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் விளைவாகத் தேர்தல் நடாத்தப்படுமாயின் மாத்திரம் அத்தகைய தேர்தலின் பின்னர் ஒருவருடம் கழியும்வரை காத்திருக்க வேண்டும். அதற்கு மேலதிகமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களால் சாதாரண பெரும்பான்மைகொண்ட பிரேரணையொன்று நிறைவேற்றப்படுவதன் மூலமாகப் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்க இயலும். இதன் மூலமாக சட்டவாக்கத்துறை முழுமையாக ஜனாதிபதியின் அதிகாரத்திற்குக் கட்டுப்படுவதோடு நிலவுகின்ற பாராளுமன்றத்தை பலவீனப்படுத்துகின்றது. இந்த ஏற்பாடுகள் மூலமாக மக்களின் ஆணை பலவீனப்படுத்தப்படுவதும் கவலைக்குரிய விடயமாகும்.

**நீதித்துறை சுதந்திரம் - 20 ஆவது திருத்தத்தின் 6, 23 மற்றும் 25 ஆவது பிரிவுகள்**

முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது திருத்தத்தின்கீழ் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றப் பேரவையின் அங்கீகாரமின்றிப் பிரதம நீதியரசர் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதியரசர்களும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களும் நியமிக்கப்படலாம்: நீக்கப்படலாம். அத்துடன் அவர்களின் முதுநிலை அல்லது நீதித்துறைசார்ந்த அனுபவத்தைக் கருத்திற்கொள்ளாமல் அத்தகைய நியமனங்களை மேற்கொள்ள ஜனாதிபதியவர்களால் இயலும். இத்திருத்தம் மூலமாக நீதித்துறைச் சுதந்திரம் நேரடியாகவே கொச்சைப்படுத்தப்படுகின்றது. அரசியலமைப்பின் பொறுப்பாளிகளாக அரசாங்கத்தின் ஏனைய பிரிவுகள்மீதான முக்கியமான தடையென்றவகையில் நீதித்துறையின் சுயாதீனம் பரிசுத்தமாகக் கருதப்படல் வேண்டும்.

**சுயாதீனமான ஆணைக்குழுக்கள் - 20ஆவது திருத்தத்தின் 6 ஆவது பிரிவு**

அரசியலமைப்புப் பேரவையை மீள்நிறுவுகின்ற பாராளுமன்ற பேரவை எவ்விதமான நல்லாட்சியையும் வெளிக்காட்டுவதில்லை. ஜனநாயக செயற்பாங்கின் அதன் தத்துவங்கள் இத்திருத்தம் மூலமாகக் கவனியாமல் விடப்படுகின்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றப் பேரவையின் அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாத்திரம் அமைவதோடு தலைசிறந்த மற்றும் கொள்கைப்பிடிப்புள்ள சுயாதீனமான அங்கத்தவர்கள் இனிமேலும் அதில் உள்ளடக்கப்படமாட்டார்கள். அரசியலமைப்புப் பேரவை போலன்றிப் பாராளுமன்றச் சபையினால் அவதானிப்புகளை மாத்திரம் வழங்க இயலும். அவை ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தமாட்டாது.

எனவே மேலே குறிப்பிட்ட நீதித்துறைசார்ந்த நியமனங்களுக்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணைக்குழு, பகிரங்க சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நீதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆகிய குழுக்களுக்கான நியமனங்களை மேற்கொள்வதற்காகவும் சட்டத்துறை தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி, நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர்களை நியமிப்பதற்கான எல்லையற்ற தத்துவங்கள் ஜனாதிபதிக்கு உரித்தாகின்றன. இந்த அனைத்து ஆணைக்குழுக்களும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கான பொறியமைப்புகளாகவே தாபிக்கப்பட்டன. இம்முக்கியமான நியமனங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியிடம் மாத்திரம் அதிகாரங்களைக் குவிப்பதன் மூலமாக அதிகாரத்தில் இருக்கின்றவர்களை பொறுப்புக்கூறச் செய்விக்கின்ற மேற்படி நிறுவனங்களின் சுயாதீனத்தன்மை பலவீனப்படுத்தப்படுகின்றது.

பாராளுமன்றம் மேலதிக சட்டங்களை விதித்தாலேயன்றி நிலைமாறு கால நீதிச் சட்டத்திற்குட்பட்ட மூன்று பிரதான நிறுவனங்களான தகவலறிவதற்கான ஆணைக்குழு,

காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீடு வழங்கும் அலுவலகம் முதலியவை 20ஆவது திருத்தம் மூலமாகப் புறந்தள்ளப்படுவதன் மூலமாக அவை செயலிழக்கின்ற நிலைமை உருவாகியுள்ளன. (20 ஆவது திருத்தத்தின் 6 ஆவது பிரிவு). 20 ஆவது திருத்தத்தின்கீழ் அரசியலமைப்புப் பேரவையை மீள்நிறுவுகின்ற பாராளுமன்ற பேரவைக்கு இந்நியமனங்களை பரிசீலனை செய்வதற்காக வலுவளிக்கப்படவில்லை. 2018ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதன் பின்னர் இம்மூன்று நிறுவனங்கள் சாதாரண பொதுமக்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கான உரிமைகள் மற்றும் நீதிக்கான அணுகலை வழங்கியுள்ளன. எனவே நீதிக்கான அணுகல் பற்றிய ஏற்பாடுகளைப் பொருட்படுத்தாமல் விடுகின்ற அரசாங்கத்தின் நோக்கங்கள் எமது தீவிரமான கவலைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

**பொறுப்புக்கூறலும் ஊழல் எதிர்ப்பும்**

தேர்தல் காலங்களில் அரசாங்க ஆதனங்களின் தவறான பாவனைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவைத் தடுத்து அரசாங்க சேவைக்கு எந்தவொரு விடயம் சம்பந்தமாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்புரைகளை விடுப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (20ஆவது திருத்தத்தின் 20 (02) பிரிவு) தேர்தல்களுடன் தொடர்புடைய தவறுகளில் பெரும்பாலானவை அரசாங்க ஆதனங்களின் தவறான பாவனை சம்பந்தமானவையாக அமைவதோடு அதன்மூலமாக அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு நன்மை விளைகின்றது. அதற்கு மேலதிகமாக அரசாங்க பணத்தைச் செலவிடுதல் தொடர்பிலான அத்தியாவசியமான பொறியமைப்பிற்கு பங்கம் விளைவித்து தேசிய பெறுகை ஆணைக்குழு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ( 20ஆவது திருத்தத்தின் பிரிவுகள் 33 – 40) ஜனாதிபதி செயலாளரின் அலுவலகத்தைக் கணக்காய்விற்கு இலக்காக்குவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகத்திற்கு இனிமேலும் அவசியமேற்படமாட்டாது. நாட்டுத் தலைவர்களின் நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படைத்தன்மைமிக்கவையாக அமையமாட்டாதென்பதே அதன் கருத்தாகும். மேலும்,“2007 இன் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அல்லது பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற மற்றும் அதன் பங்குகளில் நூற்றுக்கு ஐம்பது வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தை அரசாங்கமோ அல்லது அரச கம்பனியோ அல்லது உள்ளூராட்சி நிறுவனமோ வகின்ற கம்பனிகள்” அரசியலமைப்பின் 154(1) பிரிவின்கீழ் கணக்காய்வு செய்யப்படுவதற்கான அவசியப்பாடு 20ஆவது திருத்தத்தின் 40 (1) பிரிவு மூலமாக நீக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக உண்மையிலேயே கருதப்படுவது யாதெனில் விமானக் கம்பனிகள் மற்றும் சக்திவலு சார்ந்த கம்பனிகள் போன்ற அரசாங்கத்திற்குப் பாரிய நட்டத்தை ஏற்படுத்திய நிறுவனங்களை தொடர்ந்தும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது என்பதுாகும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அரசியலமைப்புரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுதல் நீக்கப்பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் சாதாரண பெரும்பான்மை மூலமாக அதனை இல்லாதொழிக்க எதிர்கால அரசாங்கத்திற்கு இயலும். (20 ஆவது திருத்தத்தின் 54 ஆவது பிரிவு) தன்னாலேயே புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்காக ஆணைக்குழுவின் தத்துவங்கள் நீக்கப்பட்டுள்ளன. இத்திருத்தங்கள் அரசாங்கத்திற்கு ஊழலுக்கான கதவுகளைத் திறந்துவிடுவதோடு கட்டுப்பாட்டுச் செயற்பாட்டின் ஒரு பகுதியை ஆக்குகின்ற பொறுப்புக்கூறலின் முக்கியமான அம்சத்தை நீக்குகின்றன.

**நபர் ஒருவர் தனது கருத்து வெளிப்பாடு தொடர்பில் கொண்டுள்ள உரிமை**

முன்மொழியப்பட்டுள்ள 20ஆவது திருத்தம் ஜனாதிபதியின் நிறைவேற்றுத் தீர்மானங்களுக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வதற்காக பிரஜை கொண்டுள்ள உரிமை நீக்கப்படுகின்றது. (20 ஆவது திருத்தத்தின் 5 ஆவது பிரிவு) தாம் தெரிவு செய்த ஜனாதிபதியைத் தனது நிறைவேற்றுச் செயற்பாடு காரணமாக பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்துவதற்கான பிரஜையின் உரிமையை நீக்குதல், அண்மைக்கால வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த வழக்குத்தீர்ப்பு மூலமாக அரசியல் அதிகாரத்துவத்தின் பயணப்பாதையை இடைநிறுத்திய முற்போக்குவாத ஜனநாயக உரிமையைக் கடுமையாகப் பலவீனப்படுத்துகின்றது. உரிய காலப்பகுதிக்கு முன்னராகப் பாராளுமன்றத்தைக் கலைத்தல் தொடர்பான வழக்கு மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்குத் தான்தோன்றித்தனமாக விடுதலை வழங்குதல் பிரஜைகளால்

சவால்நிறைந்த நிறைவேற்று தீர்மானத்தை ஆட்சேபனைக்கு இலக்காக்கியமைக்கான தக்க உதாரணங்களாகும்.
இதற்கு மேலதிகமாக “அவசர தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக” அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவது அவசியப்படமாட்டாது. (20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 27ஆவது பிரிவு) சட்டமூலமொன்றின் உள்ளடக்கத்தை அறிந்துகொள்ளவும் அவசியமேற்படின் அதனை ஆட்சேபனைக்கு உட்படுத்தவும் பிரஜைகள் கொண்டுள்ள உரிமை இச்செயற்பாங்கினால் முற்றாகவே நீக்கப்படுகின்றது. உச்ச அளவில் 72 மணித்தியாலங்களுக்குள் சட்டமூலத்தின் அரசியலமைப்பிற்கு அமைந்தொழுகுந்தன்மை பற்றி விசாரித்தறிய ஜனாதிபதி அதனை உயர்நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும். காலம் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள வரையறைகள் சட்டவாக்கத்தின் அநாவசியமான துரிதப்படுத்துதல் மற்றும் அதன்மூலமாக நீதித்துறை மீளாய்வின் தரம்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**ஜனாதிபதியின் கடமைகள்**

அரசியலமைப்பிற்கு மதிப்பளித்து அதனைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஜனாதிபதி கொண்டுள்ள கடப்பாடு முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்ததத்தினால் நீக்கப்படுகின்றது. தனது அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமானங்களை பலப்படுத்தும்பொருட்டு நாட்டின் தலைவர் திட்டவட்டமாக அர்ப்பணிக்கவில்லை எனும் விடயம் பாரதூரமானவகையில் கவனஞ் செலுத்தப்படவேண்டியதொன்றாகும். நியாயமானதும் சுதந்திரமானதமான சமூகமொன்றை நிறுவுவதற்காக ஆட்சியாளர்களுக்கு அறிவிக்கப்பட கருதியுள்ள அடிப்படை உரிமைகள், சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் ஆபத்திற்கு இலக்காகக்கூடிய குழுக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற ஏற்பாடுகள் பொருள்கோடலுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளமை அபாயத்தை உருவாக்குகின்றன.

தேசிய மீளிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டினை மேம்படுத்துவதற்கான ஜனாதிபதியின் செயற்பொறுப்பும் 3 ஆவது பிரிவினால் நீக்கப்படுகின்றது. யுத்தத்திற்குப் பிற்பட்டகால மீளக்கட்டியெழுப்புவதற்கான முயற்சி மற்றும் அண்மைக்கால வன்முறைசார்ந்த தீவிரவாதக் குழுக்கள் உருவாகுகின்ற பின்னணியில் அனைத்துப் பிரஜைகளினதும் முழுமையான நலனோம்புகை மற்றும் தேசிய மீளிணக்கம் ஒருமைப்பாடு பற்றிய கருத்துக்களால் நாட்டின் தலைமைத்துவம் வழிகாட்டப்படாமை அச்சம் தரவல்ல ஒன்றாகும்.
அரசியலமைப்பு மறுசீரமைப்பானது பங்கேற்றல் செயற்பாங்கினூடாக கவனமாக பரிசீலிக்கப்படுவதை அவசியப்படுத்துகின்றது. 2016 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு மறுசீரமைப்பிற்கான மக்கள் பிரதிநிதிகள் குழு அனைத்து மாவட்டங்களிலும் நடாத்திய மக்கள் கருத்தறிதல் தொடர்கள் மூலமாக விதப்புரைகளை முன்வைத்த போதிலும் 20ஆவது திருத்தம்அவற்றைக் கவனத்திற்கொள்ளாமை துரதிஸ்டவசமானதாக அமைகின்றது. பெரும்பாலான பெண்களை உள்ளடக்கிய இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். 20ஆவது அரசியலமைப்புச் சட்டமூலம் இந்த விடயங்கள் தொடர்பில் மிகவும் குறைவான கவனத்தையே செலுத்தியுள்ளது. அங்கு எதிர்பார்த்த மதியுரை மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.
எனவே புதிய அரசியலமைப்புத் திருத்தமொன்றிற்கான வரைவினைத் தயாரிக்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் ஜனநாயகக்கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் முழுமையாகப் பொருட்படுத்தாமல் விடப்பட்டுள்ளமையை நாங்கள் கண்டிக்கிறோம். ஒரு சட்டமாக அங்கீகரிக்கப்பட முன்னராக 20 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை கவனமாக மீளாய்வுசெய்து மீள் பரிசீலனை செய்யுமாறு நாங்கள் அரசாங்கத்திடமும் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுக்கிறோம்.